# PRESS NOTE

## Former Inspector of Police, Siruganur PS, Trichy Dist convicted for 5 years in graft case

On the complaint of Tr.Srinivasan, a farmer, Perakambi village, Trichy District, a case was registered in Trichy Vigilance and Anti-Corruption Cr.No.15/2006, against Tr.S.P.Selvaraj, formerly Inspector of Police, Siruganur PS, Trichy District for the demand of Rs.6000/- as bribe for booking simple charge in hurt case and for releasing the complainant Tr.Srinivasan in Station bail.

During the course of Investigation, on 01.11.2006, a trap was organised and the accused Tr.S.P.Selvaraj, formerly Inspector of Police, Siruganur PS, Trichy District was arrested for the demand and acceptance of bribe Rs.6000/-from the complainant.

Tr.Karthikeyan, Hon'ble Special Judge, the Special Court for the trail of Prevention of Corruption Act Cases, Trichy has convicted the accused Tr.S.P.Selvaraj, formerly Inspector of Police, Siruganur PS, Trichy District on charges of Corruption. The Court has sentenced the accused to undergo Rigorous Imprisonment for 1 year and slapped a fine of Rs.10,000/- in default to pay the fine amount to undergo simple Imprisonment for 6 months for U/s. 7 of PC Act and to undergo Rigorous Imprisonment for 5 year and slapped a fine of Rs.10,000/- in default to pay the fine amount to undergo simple Imprisonment for 6 months for the offences U/s. 13(2) r/w 13(1) (d) of PC Act. The sentences will run concurrently.

# செய்திக்குறிப்பு

## அடிதடி வழக்கில் விவசாயியை சிறைக்கு அனுப்பாமல் காவல்நிலைய பிணையில் விட 6 ஆயிரம் லஞ்சம் வாங்கிய முன்னால் சிறுகனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு 5 ஆண்டு கடுங்காவல் சிறை

திருச்சி மாவட்டம், பெரகம்பியைச் சேர்ந்த விவசாயி திரு.சீனிவாசன் என்பவர் மீதான அடிதடி வழக்கில் சிறைக்கு அனுப்பாமல் குற்றத்தை குறைத்து பதிவு செய்து காவல்நிலைய பிணையில் விடுவிக்க லஞ்சம் ரூ.6000/– கேட்டது தொடர்பாக கடந்த 01.11.2006 அன்று திரு.S.P.செல்வராஜ், முன்னாள் காவல் ஆய்வாளர், சிறுகனூர் காவல் நிலையம், திருச்சி என்பவர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2006–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நடைபெற்ற பொறிவைப்பு நடவடிக்கையின் போது, திரு.சீனிவாசனிடம் லஞ்ச பணம் ரூ.6000/– கேட்டு பெற்றது தொடர்பாக மேற்படி எதிரி திரு.S.P.செல்வராஜ், முன்னாள் காவல் ஆய்வாளர், சிறுகனூர் காவல்நிலையம், திருச்சி என்பவர் திருச்சி லஞ்ச ஒழிப்பு போலீசாரால் கைது செய்யப்பட்டார். மேற்படி வழக்கானது திருச்சி, ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. விசாரணை முடிவுற்று இன்று 28.03.2023, திருச்சி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்ற நீதிபதி திரு.கார்த்திகேயன் அவர்கள், மேற்படி திரு.S.P.செல்வராஜ், முன்னாள் காவல் ஆய்வாளர், சிறுகனூர் காவல் நிலையம், திருச்சி என்பவர் லஞ்ச பணம் கேட்டு பெற்ற குற்றத்திற்காக ஒரு ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.10,000/–அபராதமும், அபராதத்தை கட்ட தவறினால் 6 மாதம் சிறை தண்டனையும் மற்றும் அரசு பதவியை தவறாக பயன்படுத்திய குற்றத்திற்காக ஐந்து ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.10,000/– அபராதமும், அபராதத்தை கட்ட தவறினால் 6 மாதம் சிறை தண்டனையும் விதித்ததோடு மேற்கண்ட தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிட்டார்.